# வணிகவரி மற்றும் பதிவுத்துறை

## மானியக் கோரிக்கை எண்.11

## முத்திரைத் தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு

## கொள்கை விளக்கக் குறிப்பு 2021–2022


பி.மூர்த்தி

வணிகவரி மற்றும்

பதிவுத்துறை அமைச்சர்



©

தமிழ்நாடு அரசு

2021

<u>பொருளடக்கம்</u>


| வரிசை எண். | பொருள் | | பக்கம் எண். |
|---|---|---|---|
| 1. | முன்னுரை | | 1 |
| 2. | துறையின் கட்டமைப்பு | | 4 |
| | 2.1. | பதிவு மண்டலங்கள் | 6 |
| | 2.2. | உதவி பதிவுத்துறை தலைவர் அலுவலகங்கள் | 8 |
| | 2.3. | பதிவு மாவட்டங்கள் | 9 |
| | 2.4. | பதிவுத்துறையின் தணிக்கைப் பிரிவு | 11 |
| | 2.5. | சார்பதிவாளர் அலுவலகங்கள் | 13 |
| | 2.5.1. | சார்பதிவாளர்களது பணிகள் | 13 |
| | 2.6. | பதிவுத்துறை பயிற்சி மையம் | 14 |
| | 2.7. | சிறப்பு கட்டடங்கள் கள ஆய்வு அலுவலர்கள் | 15 |
| 3. | பதிவுத்துறையில் நடைமுறையில் உள்ள சட்டங்கள் | | 16 |
| | அ) | முழுமையாக நடைமுறைப்படுத்தப்படும் சட்டங்கள் | 16 |
| | ஆ) | பகுதியாக நடைமுறைப்படுத்தப்படும் சட்டங்கள் | 16 |

| | | | |
|---|---|---|---|
| 4. | துறை வருவாய் விவரம் | | 17 |
| 5. | உள்ளாட்சி அமைப்புகளுக்கு மாற்றுத் தீர்வை மிகுவரி பகிர்ந்தளித்தல் | | 19 |
| 6. | மாவட்ட வருவாய் அலுவலர் (முத்திரை)/தனித்துணை ஆட்சியர் (முத்திரை) ஆகியோரின் பணி | | 20 |
| 7. | சந்தை மதிப்பு வழிகாட்டி | | 25 |
| 8. | பதிவுச் சட்டம், 1908–இன் கீழ் செய்யப்பட்ட முக்கிய மாற்றம் | | 28 |
| | 8.1. | முறைகேடான ஆவணப் பதிவினை தடுக்கும் நடவடிக்கைகள் | 29 |
| | 8.2. | குறு, சிறு, நடுத்தர தொழில் நிறுவனங்களால் பதிவு செய்யப்படும் உரிமை ஆவணங்கள் ஒப்படைப்பு குறித்த ஆவணங்களுக்கு முத்திரைத் தீர்வை விலக்கு | 31 |
| 9. | சங்கங்கள் பதிவு | | 32 |
| 10. | சீட்டுகள் பதிவு | | 35 |
| | 10.1. | சீட்டு நடுவர் மன்றம் | 37 |
| 11. | கூட்டு பங்காண்மை நிறுவனங்கள் பதிவு | | 38 |
| 12. | முத்திரைத்தாள் விற்பனையாளர்கள் | | 39 |
| 13. | ஆவண எழுத்தர்கள் | | 40 |
| 14. | திருமண பதிவு | | 42 |
| 15. | துறையில் தகவல் தொழில் நுட்பத்தின் வளர்ச்சி – கணினிமயமாக்கம் மற்றும் இலக்கமயமாக்கம் | | 44 |

| | | |
|---|---|---|
| 16. | வெளிப்படைத்தன்மையினை உறுதிப்படுத்தும் 'ஸ்டார் 2.0' மென்பொருள் மற்றும் ரெஜிநெட் (REGINET) இணைய தள சேவையின் சிறப்பம்சங்கள் | 49 |
| 17. | இணைய நெறிமுறை புகைப்பட கருவிகள் (IP camera) | 54 |
| 18. | இணைய வழியாக வங்கிகளில் பணம் செலுத்திடும் முறை | 55 |
| 19. | வில்லங்கச் சான்று எவ்வித கட்டணமுமின்றி இணையதளத்தில் பார்வையிடும் மற்றும் பதிவிறக்கம் செய்து கொள்ளும் வசதி | 57 |
| 20. | வில்லங்கச் சான்றுகள் மற்றும் ஆவணங்களின் சான்றிட்ட நகல்களை இணையதளம் வழியாக பெறும் வசதி | 59 |
| 21. | மின்னணு பதிப்புமுறை (e-Stamping) | 60 |
| 22. | வலை நிழலி (Web-Cam) மற்றும் மின்னணு ரேகை பதிவு (**Bio-metric device**) செயல்படுத்தல் | 62 |
| 23. | மின் கையொப்பம் (e–Sign) | 63 |
| 24. | சார்பதிவாளர் அலுவலகங்களில் உள்ள ஆவணத்தொகுதிகளை மின்னணுமயமாக்கல் | 64 |
| 25. | ஆவணத்தை எழுதி கொடுப்பவர் மற்றும் எழுதி வாங்குபவரது விரல் ரேகை/ கருவிழிப்படல தரவுகளை ஆதார் தரவுடன் சரிபார்க்கும் முன்னோடி திட்டம் | 66 |

| | | | |
|---|---|---|---|
| 26. | தானியங்கி பட்டா மாற்றம் (Automatic Patta Transfer) | | 68 |
| 27. | எளிதாக தொழில் நடத்த மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் | | 70 |
| | 27.1 | மாநில சட்ட ஆணையத்தின் பரிந்துரையின்படி வழக்கற்றுப்போன சட்டங்களை இரத்து செய்தல் மற்றும் சட்ட திருத்தங்கள் மேற்கொள்ளுதல் | 72 |
| 28. | தகவல் அறியும் உரிமைச் சட்டம், 2005–இன் கீழ் பெறப்பட்ட மனுக்கள் | | 73 |
| 29. | பொது நலன் கருதி புதிய அரசு மேற்கொண்டுள்ள சீரிய முயற்சிகள் | | 74 |
| | 29.1. | கட்டுப்பாட்டு அறை | 74 |
| | 29.2. | பதிவு அலுவலகங்களில் உயர் மேடைகள் மற்றும் தடுப்புகள் அகற்றம் | 75 |
| | 29.3. | ஆவணஎழுத்தர்கள் / ஆவணம் எழுதும் வழக்கறிஞர்களின் புகைப்படத்தினை ஆவணத்தில் ஒட்டுதல் | 76 |
| 30 | நிறைவுரை | | 77 |

# வணிகவரி மற்றும் பதிவுத்துறை
# மானியக் கோரிக்கை எண். 11
# முத்திரைத்தாள்கள் மற்றும் பத்திரப்பதிவு
# கொள்கை விளக்கக்குறிப்பு 2021-2022

முன்னுரை

"இயற்றலும் ஈட்டலுங் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்ல தரசு"

– திருக்குறள்-385.

பதிவுத்துறையானது மக்களின் வாழ்வியலோடு இணைந்து செயலாற்றும் ஒரு துறையாக விளங்கி வருகிறது. பொதுமக்கள் தங்கள் வாழ்நாளில் ஒருமுறையாவது பதிவுத்துறையின் சேவையை நாடுகின்றனர். சொத்துகளின் மீதான உரிமையை தமது பெயரில் பதிவு செய்து கொள்ளவும் திருமணத்தைப் பதிவு செய்து கொள்ளவும் சங்கங்கள், சீட்டுகள் மற்றும் கூட்டாண்மை நிறுவனம் போன்ற குழுவாகக் கூடி செயல்படும் நடவடிக்கைகளைப் பதிவு செய்து கொள்ளவும் பொதுமக்கள் பதிவுத்துறையின்

சேவையை எதிர்நோக்கியுள்ளனர். ஆங்கிலேயர் காலத்திலேயே சங்கங்களை முறைப்படுத்த இயற்றப்பட்ட சங்கங்களின் பதிவுச் சட்டம், 1860, திருமணங்களை நெறிப்படுத்த இயற்றப்பட்ட இந்திய கிறிஸ்துவ திருமணப்பதிவுச் சட்டம், 1872 ஆகியன தற்போதும் செயல்பாட்டில் உள்ளன. 1864–ஆம் ஆண்டு பதிவுத்துறை தொடங்கப்பட்டு, 157 ஆண்டுகளைக் கடந்து வெற்றிகரமாக மக்கள் பணி ஆற்றி வருகிறது.

ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் ஆவணங்களைப் பதிவு செய்து கொள்ள முத்திரைத்தீர்வை அறிமுகப்படுத்தப்பட்டு, அதனை முறைப்படுத்தும் நோக்கில் இந்திய முத்திரைச் சட்டம், 1899 இயற்றப்பட்டது. இதனைத் தொடர்ந்து பதிவுச் சட்டம், 1908 நடைமுறைக்கு வந்தது. இச்சட்டங்கள் பதிவுத்துறையால் தற்போதும் முழுமையாக

செயல்படுத்தப்பட்டு வருகின்றன. ஆவணங்கள், திருமணங்கள், சீட்டுகள், சங்கங்கள், கூட்டாண்மை நிறுவனங்கள் ஆகியவற்றைப் பதிவு செய்தல், பிறப்பு இறப்பு சான்றுகள் வழங்குதல் முதலான சேவைகளை பதிவுத்துறை வழங்கி வருகிறது. மேலும் மாநிலத்தின் வருவாய் ஈட்டும் துறைகளில் முக்கிய துறையாக விளங்கி வரும் பதிவுத்துறை, மாநில வருவாயில் ஏறக்குறைய 10 விழுக்காடு (10%) பங்கினை அளித்து வருகிறது.

பதிவுத்துறையின் மிகப்பெரும் சாதனையாக 'ஸ்டார்' ('STAR' – Simplified and Transparent Administration of Registration) திட்டம் பார்க்கப்படுகிறது. 06.02.2000 அன்று மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்களால் ஆரம்பித்து வைக்கப்பட்ட இத்திட்டத்தின் கீழ்

பதிவுத்துறையின் அனைத்து செயல்பாடுகளும் கணினி மயமாக்கப்பட்டுள்ளதோடு, துறையின் அனைத்து ஆவணங்களும் இலக்கமயமாக்கப்பட்டுள்ளன. இவ்வாறு பதிவுத்துறை முற்றிலும் மின்னணு மயமாக்கப்பட்டுள்ளதால் பொதுமக்களுக்கு எளிமையான, வெளிப்படையான, துரிதமான சேவைகள் உடனுக்குடன் வழங்கப்பட்டு வருகின்றன. பதிவுத்துறையின் சேவையை நாடி வரும் பொதுமக்களுக்கு பதிவு அனுபவத்தை ஓர் இனிய அனுபவமாக மாற்றுவதே இத்துறையின் முக்கிய நோக்கமாக உள்ளது.

## 2. துறையின் கட்டமைப்பு

சென்னையை தலைமையிடமாகக் கொண்டு பதிவுத்துறைத் தலைவர் தலைமையில் பதிவுத்துறை இயங்கி வருகிறது. பதிவுத்துறைத் தலைவருக்கு

உதவியாக கீழ்கண்ட நான்கு கூடுதல் பதிவுத்துறை தலைவர்கள் உள்ளனர்.

| வ. எண் | பதவி | மேற்பார்வையிடும் பணிகள் |
|---|---|---|
| 1. | கூடுதல் பதிவுத்துறை தலைவர் (முத்திரை மற்றும் பதிவு) | இந்திய முத்திரைச் சட்டம், பதிவுச் சட்டம், வருவாய் வரவினம் தொடர்பான மாநில கணக்காயர் தணிக்கை, கணினிமயமாக்கல். |
| 2. | கூடுதல் பதிவுத்துறை தலைவர் (சீட்டு மற்றும் சங்கம்) / கூடுதல் சீட்டு பதிவாளர் | சீட்டு நிதிச் சட்டம், தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டம், அலுவலக கட்டடங்கள் மற்றும் பராமரிப்பு, முத்திரைத் தாள் விற்பனையாளர் மற்றும் ஆவண எழுத்தர் உரிமம், அலுவலக ஆய்வுகள். |
| 3. | கூடுதல் பதிவுத்துறை தலைவர் (புலனாய்வு) | கட்டட களப்பணி, துறை தணிக்கை, திருமண சட்டங்கள், பிறப்பு இறப்பு சட்டம், துறை வாகனங்கள், எழுது பொருட்கள். |
| 4. | கூடுதல் பதிவுத் துறை தலைவர் (வழிகாட்டி) | இந்திய முத்திரைச் சட்டம், 1899 பிரிவு 47(A), சந்தை வழிகாட்டி மதிப்பு, ஆவணங்களின் தன்மை. |

## 2.1. பதிவு மண்டலங்கள்

பதிவுத்துறை ஒன்பது மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. ஒவ்வொரு மண்டலமும் ஒரு துணை பதிவுத்துறைத் தலைவரின் தலைமையில் நிர்வகிக்கப்படுகிறது.

மண்டல வாரியாக பதிவு மாவட்ட விவரங்கள்:–

| வ. எண் | பதிவு மண்டலம் | மண்டல தலைமையிடம் | பதிவு மாவட்டங்கள் |
|---|---|---|---|
| 1. | சென்னை | தென்சென்னை | வடசென்னை<br>தென்சென்னை<br>மத்திய சென்னை<br>செங்கல்பட்டு<br>காஞ்சிபுரம் |
| 2. | வேலூர் | வேலூர் | வேலூர்<br>செய்யார்<br>அரக்கோணம்<br>திருவண்ணாமலை |
| 3. | கடலூர் | கடலூர் | கடலூர்<br>விழுப்புரம்<br>கள்ளக்குறிச்சி<br>சிதம்பரம்<br>திண்டிவனம்<br>விருத்தாச்சலம் |

| வ. எண் | பதிவு மண்டலம் | மண்டல தலைமையிடம் | பதிவு மாவட்டங்கள் |
|---|---|---|---|
| 4. | சேலம் | சேலம் | சேலம் (கிழக்கு)<br>சேலம் (மேற்கு)<br>கிருஷ்ணகிரி<br>நாமக்கல்<br>தர்மபுரி |
| 5. | திருச்சிராப்பள்ளி | திருச்சிராப்பள்ளி | திருச்சிராப்பள்ளி<br>அரியலூர்<br>கரூர்<br>புதுக்கோட்டை |
| 6. | தஞ்சாவூர் | தஞ்சாவூர் | தஞ்சாவூர்<br>நாகப்பட்டிணம்<br>மயிலாடுதுறை<br>பட்டுக்கோட்டை<br>கும்பகோணம் |
| 7. | கோயம்புத்தூர் | கோயம்புத்தூர் | கோயம்புத்தூர்<br>திருப்பூர்<br>உதகமண்டலம்<br>ஈரோடு<br>கோபி–<br>செட்டிபாளையம் |
| 8. | மதுரை | மதுரை | மதுரை (வடக்கு)<br>மதுரை (தெற்கு)<br>திண்டுக்கல்<br>பழனி<br>பெரியகுளம் |

| வ. எண் | பதிவு மண்டலம் | மண்டல தலைமையிடம் | பதிவு மாவட்டங்கள் |
|---|---|---|---|
| | | | இராமநாதபுரம்,<br>சிவகங்கை<br>விருதுநகர்<br>காரைக்குடி |
| 9. | திருநெல்வேலி | திருநெல்வேலி | திருநெல்வேலி<br>பாளையங்கோட்டை<br>சேரன்மகாதேவி<br>தென்காசி<br>தூத்துக்குடி<br>கன்னியாகுமரி<br>மார்த்தாண்டம் |

## 2.2. உதவி பதிவுத்துறை தலைவர் அலுவலகங்கள்

சென்னை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி மற்றும் மதுரை ஆகிய இடங்களில் உதவி பதிவுத்துறை தலைவர்களின் தலைமையில் கூடுதலாக மண்டல அலுவலகங்கள் செயல்பட்டு வருகின்றன. சார்பதிவாளர் நிலையிலுள்ள பதிவு அலுவலகங்களின் தணிக்கை மறுப்புரையின் மீது

தணிக்கை மாவட்டப் பதிவாளர்களால் பிறப்பிக்கப்படும் இறுதியாணையினை எதிர்த்து சார்பதிவாளர்களால் செய்யப்படும் மேல்முறையீடுகளின் மீது சரக உதவி பதிவுத்துறை தலைவர்கள் ஆணைகள் பிறப்பிக்கின்றனர். பதிவு அலுவலகங்களில் கூர்ந்தாய்வு பணிகளையும் மேற்கொள்கின்றனர்.

## 2.3. பதிவு மாவட்டங்கள்

தமிழ்நாட்டில் மொத்தம் 50 பதிவு மாவட்டங்கள் உள்ளன. ஒவ்வொரு பதிவு மாவட்டத்தின் தலைவராக மாவட்டப் பதிவாளர் (நிர்வாகம்) உள்ளார். இவற்றில் மாநகராட்சிகளை உள்ளடக்கிய 16 பதிவு மாவட்டங்கள் உதவி பதிவுத்துறை தலைவர் நிலை அலுவலர்களால் நிர்வகிக்கப்படுகின்றன.

அ) மாவட்டப் பதிவாளர் தனது ஆட்சி எல்லைக்குள் அமையப் பெற்ற சார்பதிவகங்களை கண்காணிக்கிறார்.

ஆ) சார்பதிவகங்களில் காலமுறையில் ஆய்வுகள் மேற்கொள்கிறார்.

இ) பதிவு மறுப்பு செய்திட்ட ஆவணங்களின் மீதான மேல்முறையீட்டு மனுக்களின் மீது மாவட்டப் பதிவாளர் ஆணைகள் பிறப்பிக்கிறார்.

ஈ) இந்திய முத்திரைச் சட்டம், 1899, பிரிவு 31 மற்றும் 32ன் கீழ் ஆவணம் சரியான முத்திரைத் தீர்வையுடன் உள்ளதா என்பதை தீர்மானம் செய்து சான்று வழங்குகிறார்.

உ) ஆவணப் பதிவு முடிவுற்ற பின்னர் ஆவணத்திற்கு சரியான முத்திரைத் தீர்வை செலுத்தப்படவில்லை என்ற விவரம் கண்டறியப்படும் நிகழ்வுகளில் இந்திய முத்திரைச் சட்டம், 1899, பிரிவு 33(A)ன் கீழ்

விசாரணை மேற்கொண்டு குறைவு முத்திரைத் தீர்வை செலுத்தக் கோரி சான்று வழங்குகிறார்.

ஊ) சங்கங்கள் பதிவு மற்றும் அதன் தொடர்பான விவரங்கள் பதிவு செய்தல் ஆகிய பணிகளையும் மேற்கொள்கிறார்.

எ) கூட்டாண்மை நிறுவனங்களைப் பதிவு செய்கிறார்.

ஏ) மாவட்டப் பதிவாளர் துணை சீட்டு பதிவாளராகவும் செயல்படுகிறார்.

ஐ) முத்திரையிடப்பட்ட இறுதிமுறி அடங்கிய உறையினை (Deposit of sealed cover containing Will) பாதுகாத்து வைப்பதற்காக மாவட்டப் பதிவாளரிடம் தாக்கல் செய்யலாம்.

## 2.4. பதிவுத்துறையின் தணிக்கைப் பிரிவு

சார்பதிவாளர் அலுவலகங்களில் மேற்கொள்ளப்படும் ஆவணப் பதிவுகளை தணிக்கை செய்வதற்கென

தனியானதொரு துறை ரீதியிலான தணிக்கை அமைப்பு இத்துறையில் உள்ளது. பதிவுத்துறையின் தணிக்கைப் பிரிவு 45 அலகுகளைக் கொண்டு, ஒவ்வொன்றும் ஒரு மாவட்டப் பதிவாளர் தலைமையில் இயங்குகின்றது.

பதிவு செய்யப்பட்ட ஆவணங்கள் அனைத்தும் நூறு விழுக்காடு தணிக்கைக்கு உட்படுத்தப்படுகிறது. தணிக்கையின் போது குறைகள் ஏதேனும் கண்டறியப்பட்டால் அவற்றை சுட்டிக் காட்டி வருவாய் இழப்பு ஏற்படும் நேர்வுகளில் அந்த இழப்புத் தொகையை வசூலிக்க உரிய சட்டப்பூர்வ நடவடிக்கைகள் உடனுக்குடன் மேற்கொள்ளப்படுகின்றன.

## 2.5. சார்பதிவாளர் அலுவலகங்கள்

மாநிலம் முழுவதிலும் 575 சார்பதிவாளர் அலுவலகங்களும் மூன்று முகாம் அலுவலகங்களும் உள்ளன. மேட்டூர் சார்பதிவகத்துடன் இணைந்துள்ள குளத்தூர், சேந்தமங்கலம் சார்பதிவகத்துடன் இணைந்துள்ள கொல்லிமலை மற்றும் கொம்மடிக்கோட்டை சார்பதிவகத்துடன் இணைந்துள்ள படுக்கப்பத்து ஆகிய முகாம் அலுவலகங்களில் செவ்வாய் மற்றும் வியாழன் ஆகிய நாட்களில் மட்டும் ஆவணப் பதிவுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

### 2.5.1 சார்பதிவாளர்களது பணிகள்

அ) சொத்து பரிவர்த்தனை தொடர்பான ஆவணப் பதிவுகள், வில்லங்கச் சான்று வழங்குதல், ஆவணத்தின் சான்றிட்ட நகல் வழங்குதல், பல்வேறு

திருமணச் சட்டங்களின் கீழ் திருமணங்கள் பதிவு செய்தல் ஆகியவை சார்பதிவாளர்களின் முக்கியமான பணிகளாகும்.

ஆ) பதிவுச் சட்டம், 1908 பிரிவு 89ன் கீழ் அனுப்பப்படும் சொத்தின் மீதான பற்றுகை போன்ற ஆணைகள், சான்றுகள் ஆகியவற்றைக் கோர்வை செய்யும் பணியினையும் சார்பதிவாளர்கள் மேற்கொள்கின்றனர்.

இ) ஊராட்சி மற்றும் பேரூராட்சி பகுதிகளுக்கான பிறப்பு மற்றும் இறப்பு பதிவேடுகளின் பாதுகாவலர்களாக சார்பதிவாளர்கள் செயல்படுகின்றனர்.

ஈ) சீட்டு நிதிச் சட்டத்தின் கீழ் உதவி பதிவாளர்களாக சார்பதிவாளர்கள் செயல்படுகின்றனர்.

## 2.6 பதிவுத்துறை பயிற்சி மையம்

பதிவுத்துறை பணியாளர்களுக்கு அவ்வப்போது துறையால் கையாளப்படும் சட்டங்கள் மற்றும் பணிகள்

தொடர்பாக பயிற்சியை வழங்க 1996–ஆம் ஆண்டு முதல் சென்னையில் பதிவுத்துறை பயிற்சி மையம் செயல்பட்டு வருகிறது. துணை பதிவுத்துறை தலைவர் நிலையில் உள்ள ஓர் இயக்குநர் தலைமையில் இம்மையம் செயல்படுகிறது. பயிற்சி பெறுபவர்களுக்கு தங்கும் விடுதி வசதி செய்யப்பட்டுள்ளது.

**2.7. சிறப்பு கட்டடங்கள் கள ஆய்வு அலுவலர்கள்**

ஆவணங்களில் குறிப்பிடப்படும் உயர்மதிப்பு கட்டடங்கள் மற்றும் சிறப்பு வகை கட்டடங்களான தொழிற்சாலை கட்டடங்கள், வணிக வளாகங்கள், திரையரங்குகள் போன்ற கட்டடங்களை மதிப்பீடு செய்வதற்காக பொதுப்பணித் துறையில் இருந்து அயற்பணியின் அடிப்படையில் இரண்டு உதவி

செயற்பொறியாளர்கள் சென்னை மற்றும் மதுரையில் பணியாற்றி வருகின்றனர்.

## 3. பதிவுத்துறையில் நடைமுறையில் உள்ள சட்டங்கள்

பதிவுத்துறையால் நடைமுறைப்படுத்தப்படும் 13 சட்டங்களில் நான்கு சட்டங்கள் முழுமையாகவும் ஒன்பது சட்டங்கள் பகுதியாகவும் நடைமுறைப் படுத்தப்படுகின்றன. அவற்றின் விவரமாவது:–

அ) முழுமையாக நடைமுறைப்படுத்தப்படும் சட்டங்கள்

1. இந்திய முத்திரைச் சட்டம், 1899
2. பதிவுச் சட்டம், 1908
3. தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டம், 1975
4. சீட்டு நிதிகள் சட்டம், 1982

ஆ) பகுதியாக நடைமுறைப்படுத்தப்படும் சட்டங்கள்

1. இந்திய கிறித்துவ திருமணச் சட்டம், 1872
2. பிறப்பு இறப்பு மற்றும் திருமணங்கள் பதிவுச் சட்டம், 1886

3. பார்சி திருமணம் மற்றும் விவாகரத்து சட்டம், 1932

4. இந்திய கூட்டுப் பங்காண்மைச் சட்டம், 1932

5. சிறப்பு திருமணச் சட்டம், 1954

6. இந்து திருமணச் சட்டம், 1955

7. வரதட்சணை தடுப்புச் சட்டம், 1961

8. பிறப்பு மற்றும் இறப்பு சட்டம், 1969

9. தமிழ்நாடு திருமணங்கள் பதிவுச் சட்டம், 2009

**4. துறை வருவாய் விவரம்**

முத்திரைத்தீர்வை மற்றும் பதிவுக் கட்டணம் ஆகியவற்றுடன் இந்து திருமணம், சிறப்பு திருமணம், சங்கம் பதிவு, சீட்டுப்பதிவு, கூட்டு வணிகப் பதிவு, வில்லங்கச்சான்று வழங்குதல், சான்றிட்ட நகல் வழங்குதல், பிறப்பு மற்றும் இறப்பு சான்று வழங்குதல் ஆகியவற்றின் மூலமும் வருவாய் ஈட்டப்படுகிறது. விற்பனை, பரிவர்த்தனை, தானம் ஆகிய

ஆவணங்களுக்கு சொத்துக்களின் சந்தை மதிப்பின் மீது 5 விழுக்காடு முத்திரைத் தீர்வையும் 4 விழுக்காடு பதிவுக் கட்டணமும் வசூலிக்கப்படுகிறது. மேற்குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களுக்கு சந்தை மதிப்பின் மீது 2 விழுக்காடு மாற்றுத் தீர்வை மிகுவரியும் வசூலிக்கப்படுகிறது. இதர ஆவணங்களுக்கு அதன் தன்மைக்கேற்ப முத்திரைத்தீர்வை மற்றும் பதிவுக் கட்டணம் வசூலிக்கப்படுகிறது.

2020-21 ஆம் ஆண்டில் இத்துறையால் பல்வேறு இனங்களின் கீழ் வசூலிக்கப்பட்ட வருவாய் விவரம்:-

| வ. எண் | வருவாய் இனம் | துறையால் வசூலிக்கப்பட்ட வருவாய் விவரம் (ரூ. கோடியில்) |
|---|---|---|
| 1. | முத்திரைத்தீர்வை | 6,474.97 |
| 2. | பதிவுக்கட்டணம் | 3,885.81 |
| 3. | திருமணப் பதிவு | 2.38 |

| | | |
|---|---|---|
| 4. | சங்கங்கள் பதிவு | 8.13 |
| 5. | சீட்டு பதிவு | 16.79 |
| 6. | இதர கட்டணங்கள் (பிறப்பு மற்றும் இறப்பு சான்றுகள், குறுந் தகடுகள் உள்பட) | 16.39 |
| 7. | பங்குச் சந்தை ஆவணங்கள் (Marketable Securities) மற்றும் காப்பீட்டுத் திட்ட ஆவணங்கள் (Insurance Policies) | 238.61 |
| **கூடுதல்** | | **10,643.08** |

இத்துறையால் 2021–22–ஆம் நிதியாண்டில் ஜுலை மாதம் முடிய 7,32,991 ஆவணங்கள் பதிவு செய்யப்பட்டு ரூ.3,342.87 கோடி வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

## 5. உள்ளாட்சி அமைப்புகளுக்கு மாற்றுத் தீர்வை மிகுவரி பகிர்ந்தளித்தல்

பதிவுத்துறையால் வசூலிக்கப்படும் மாற்றுத் தீர்வை மிகுவரி உள்ளாட்சி அமைப்புகளுக்கு பகிர்ந்தளிக்கப்படுகிறது. 2020–21 நிதியாண்டில்

வசூலிக்கப்பட்ட மிகுவரி ரூ.1,572.33 கோடியாகும். இதில் 3 சதவிகிதம் அதாவது ரூ.47.17 கோடி பதிவுத்துறைக்கும் எஞ்சிய 97 சதவிகிதம் அதாவது ரூ.1,525.16 கோடி உள்ளாட்சி அமைப்புகளுக்கும் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. ஒவ்வொரு ஆண்டும் வசூலிக்கப்படும் 1,600 கோடி ரூபாய்க்குக் குறையாத மிகுவரித் தொகை உள்ளாட்சி அமைப்புகளுக்கு பகிர்ந்தளிக்கப்படுகிறது.

**6. மாவட்ட வருவாய் அலுவலர் (முத்திரை) / தனித் துணை ஆட்சியர் (முத்திரை) ஆகியோரின் பணி**

சொத்துக்களின் சரியான சந்தை மதிப்பை நிர்ணயம் செய்வதற்காக சென்னை மற்றும் கோயம்புத்தூர் மண்டலங்களில் மாவட்ட வருவாய் அலுவலர் நிலையிலும் விருதுநகர், காஞ்சிபுரம், மதுரை,

வேலூர், சேலம், கடலூர், தஞ்சாவூர், திருச்சி, திருநெல்வேலி ஆகிய இடங்களில் தனித் துணை ஆட்சியர் நிலையிலும் இந்திய முத்திரைச் சட்டம், 1899 பிரிவு 47(A)ன் கீழ் 'முத்திரைத்தீர்வை வசூல் பணிக்கான ஆட்சியராக' வருவாய் துறையிலிருந்து அயற்பணியின் அடிப்படையில் அலுவலர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

6.1. உரிமை மாற்றம், பரிவர்த்தனை, தானம், பினாமி விடுதலை, ஏற்பாடு ஆகிய ஆவணங்களில் தெரிவிக்கப்பட்ட மதிப்பானது, சந்தை மதிப்பினை பிரதிபலிக்கவில்லை என பதிவு அலுவலரால் கருதப்படும் நேர்வில் இந்திய முத்திரைச்சட்டம், 1899 பிரிவு 47(A)(1)ன் படி சரியான சந்தை மதிப்பை நிர்ணயிப்பதற்காக அந்த ஆவணம் பதிவு செய்யப்பட்ட

பின்னர், சம்பந்தப்பட்ட மாவட்ட வருவாய் அலுவலர் (முத்திரை) அல்லது தனித்துணை ஆட்சியர் (முத்திரை)க்கு அனுப்பி வைக்கப்படுகிறது.

6.2. மாவட்ட வருவாய் அலுவலர் (முத்திரை)/தனித் துணை ஆட்சியர் (முத்திரை) ஆகியோரின் இறுதியாணை மீது ஆவணதாரர்கள் மேல்முறையீடு செய்ய விரும்பினால் முதன்மை வருவாய் கட்டுப்பாட்டு அலுவலராக செயல்படும் பதிவுத்துறை தலைவரிடம் மேல்முறையீடு செய்து கொள்ள இந்திய முத்திரைச் சட்டம், 1899 பிரிவு 47(A)(5)ன் கீழ் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

6.3. மாவட்ட வருவாய் அலுவலர் (முத்திரை)/ தனித் துணைஆட்சியர் (முத்திரை) ஆகியோரால் பிறப்பிக்கப்பட்ட மதிப்பு நிர்ணய ஆணையின் மூலம் அரசுக்கு வருவாய் இழப்பு ஏற்படும் நிலை உள்ளதாக

பதிவுத்துறை தலைவர்/முதன்மை வருவாய் கட்டுப்பாட்டு அலுவலர் கருதினால் இந்திய முத்திரைச்சட்டம், 1899 பிரிவு 47(A)(6)ன் கீழ் தன்னிச்சையாக சீராய்வு (*suo motu* Revision) மேற்கொள்ளலாம்.

6.4. இந்திய முத்திரைச் சட்டம், 1899 பிரிவுகள் 47(A)(5) மற்றும் 47(A)(6)ன் கீழ் முதன்மை வருவாய் கட்டுப்பாட்டு அலுவலரால் பிறப்பிக்கப்பட்ட ஆணைகளின் மீது ஆவணதாரர்கள் மேல்முறையீடு செய்ய விரும்பினால், உயர்நீதிமன்றத்தில் இந்திய முத்திரைச் சட்டம், 1899 பிரிவு 47(A)(10)ன்கீழ் மேல்முறையீடு செய்து கொள்ளலாம்.

6.5. மாவட்ட வருவாய் அலுவலர் (முத்திரை)/தனித் துணை ஆட்சியர் (முத்திரை) ஆகியோரால் பிறப்பிக்கப்படும் ஆணையின்படி வித்தியாச

முத்திரைத் தீர்வையினை செலுத்த ஆவணதாரர் முன்வராத நிலையில் வருவாய் வசூல் சட்டத்தின் கீழ் அதனை வசூலிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

6.6. 2020–2021 நிதியாண்டில் இந்திய முத்திரைச் சட்டம், 1899 பிரிவு 47(A)(1)ன் கீழ் பரிந்துரைக்கப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட ஆவணங்களின் விபரம்:–

| வ. எண் | விவரம் | ஆவணங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | 2020–2021 ஆண்டின் துவக்கத்தில் நிலுவையிலிருந்த ஆவணங்களின் எண்ணிக்கை | 4,389 |
| 2. | மாவட்ட வருவாய் அலுவலர்/ தனித்துணை ஆட்சியர் (முத்திரை)க்கு அனுப்பப்பட்ட ஆவணங்களின் எண்ணிக்கை | 8,756 |
| 3. | கூடுதல் | 13,145 |

| | | |
|---|---|---|
| 4. | இறுதியாணை பிறப்பிக்கப்பட்ட ஆவணங்களின் எண்ணிக்கை | 10,877 |
| 5. | குறைவு முத்திரைத் தீர்வை வசூலிக்கப்பட்ட ஆவணங்களின் எண்ணிக்கை | 8,126 |
| மேற்கண்ட 8,126 ஆவணங்களுக்கு வசூலிக்கப்பட்ட குறைவு முத்திரைத்தீர்வை தொகை ரூ.52.80 கோடி ஆகும். | | |

## 7. சந்தை மதிப்பு வழிகாட்டி

இந்திய முத்திரைச் சட்டம், 1899–இல் 2010–ஆம் ஆண்டில் திருத்தம் மேற்கொள்ளப்பட்டு பிரிவு 47AA என்ற சட்டப் பிரிவு உட்புகுத்தப்பட்டுள்ளது. இதன் மூலம் சந்தை வழிகாட்டி மதிப்பிற்கு சட்ட அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. இச்சட்டத்தின் படி, சந்தை மதிப்பு வழிகாட்டி குறித்த கொள்கையை உருவாக்குவதற்கும் சந்தை மதிப்பு வழிகாட்டிகளை மதிப்பீடு செய்வதற்கும் திருத்தங்கள் செய்வதற்கும் பதிவுத்துறை தலைவரின்

தலைமையில் செயல்படும் மாநில அளவிலான மதிப்பீட்டுக் குழுவே இறுதி அமைப்பாக உள்ளது. இக்குழு அனைத்து மதிப்பீட்டு துணைக் குழுக்களுக்கு அவ்வப்போது தேவையான வழிகாட்டுதல்களை வழங்குகிறது.

7.1. மாவட்ட அளவில் மாவட்ட ஆட்சியரின் தலைமையிலான மதிப்பீட்டு துணைக் குழுக்கள் செயல்படுகின்றன. சந்தை மதிப்பு வழிகாட்டிகள் இக்குழுக்களால் தயாரிக்கப்படுகிறது. சந்தை மதிப்பு வழிகாட்டியில் வேறுபாடுகள் கண்டறியப்படும்போது மாவட்ட அளவிலான மதிப்பீட்டு துணைக் குழு இது குறித்து விசாரிக்கலாம். ஆனால், இத்துணைக் குழுவிற்கு சந்தை மதிப்பு வழிகாட்டியினை உயர்த்த மட்டுமே அதிகாரம் உள்ளது. துணைக் குழுவால் மதிப்பு குறைக்கப்பட வேண்டிய இனங்களில் மாநில

அளவிலான மதிப்பீட்டுக் குழுவின் ஒப்புதல் பெறப்பட வேண்டும். அரசுக்கு நிலம் கையகப்படுத்தப்படும் இனங்களில் அரசின் ஒப்புதல் பெறப்பட வேண்டும்.

7.2. மதிப்பீட்டு துணைக் குழுக்களால் தயாரித்து அளிக்கப்பட்ட சந்தை மதிப்பு வழிகாட்டி 01.04.2012–இல் நடைமுறைப்படுத்தப்பட்டது. இம்மதிப்பு, 09.06.2017 முதல் 33 விழுக்காடு குறைக்கப்பட்டது.

7.3. ஊரக பகுதிகளைப் பொறுத்து சர்வே எண்களுக்கும் நகர் பகுதிகளைப் பொறுத்து தெருக்களுக்கும் சந்தை மதிப்பு வழிகாட்டி தயாரிக்கப்பட்டுள்ளது. மாநிலம் முழுவதுமுள்ள அசையா சொத்துகள் தொடர்பாக அவ்வப்போது மேம்படுத்தப்படும் சந்தை மதிப்பு வழிகாட்டியானது,

பதிவுத்துறை இணையதள முகவரி https://tnreginet.gov.in–இல் காணப்படுகிறது.

**8. பதிவுச் சட்டம், 1908–இன் கீழ் செய்யப்பட்ட முக்கிய மாற்றம்**

பொது கொள்கைக்கு எதிரான ஆவணங்கள் பதிவு செய்யப்படுவதை தடுக்கும் விதமாக பதிவுச் சட்டம், 1908–இல் 22(A) என்ற பிரிவு உட்புகுத்தப்பட்டு திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதனடிப்படையில் அரசு, உள்ளாட்சி அமைப்புகள், இந்து சமய அறநிலையத்துறை, பூதான் மற்றும் வக்ஃப் வாரியம் ஆகியவற்றுக்கு சொந்தமான நிலங்கள் மற்றும் அங்கீகாரமற்ற வீட்டு மனைப் பிரிவுகள் தொடர்பான விற்பனை, தானம், அடமானம், பரிவர்த்தனை, குத்தகை ஆகிய ஆவணங்களை உரிய அனுமதியின்றி பதிவிற்கு தாக்கல் செய்தால் பதிவுச் சட்டம், 1908 பிரிவு 22(A)ன் கீழ், சார்பதிவாளர்

அவ்வாவணங்களைப் பதிவு மறுப்பு செய்ய இயலும். மேலும், இச்சட்டத்தின் படி வாங்கியவரின் ஒப்புதல் இன்றி எழுதி கொடுக்கப்படும் கிரைய இரத்து ஆவணத்தினையும் பதிவு மறுப்பு செய்ய இயலும்.

## 8.1. முறைகேடான ஆவணப் பதிவினை தடுக்கும் நடவடிக்கைகள்

அசையா சொத்துக்கள் தொடர்பான ஆவணப் பதிவுகளின்போது மோசடியான, போலியான மற்றும் ஆள் மாறாட்ட ஆவணப் பதிவுகளை தடுத்திடும் வகையில், அவ்வாவணங்களை எழுதிக் கொடுக்கும் நபர்களுக்கு ஆவணத்தில் கண்ட சொத்தின் மீதுள்ள உரிமையினை பதிவு அலுவலர் பரிசீலித்திடும் வகையில்,

1. சொத்து குறித்த வில்லங்கச்சான்றினையும் அசல் ஆவணங்களையும் ஆவணப் பதிவின் போது தாக்கல் செய்திட வேண்டும்.

2. முன்னோரது சொத்தாக இருந்து, அசல் ஆவணங்கள் இல்லாதிருப்பின் அச்சொத்து குறித்த பட்டா உள்ளிட்ட வருவாய்துறை ஆவணங்கள், வரி ரசீதுகள் ஆகியவற்றினை தாக்கல் செய்திட வேண்டும்.
3. சொத்து குறித்த முன் அசல் ஆவணம் காணாமல் போயிருப்பின் அந்த ஆவணத்தின் சான்றிட்ட நகலுடன் காவல் துறையினரால் வழங்கப்படும் 'கண்டு பிடிக்க இயலவில்லை' என்ற சான்றினை காணாமல் போனது குறித்து நாளிதழ்களில் பிரசுரிக்கப்பட்ட விளம்பரத்துடன் தாக்கல் செய்திட வேண்டும்.
4. எழுதி கொடுப்பவர் மற்றும் எழுதி வாங்குபவரின் அசல் அடையாள அட்டையை தாக்கல் செய்திட வேண்டும்.
5. தாக்கல் செய்யப்பட்ட முன் அசல் ஆவணத்தில் முதல் பக்கத்தில் சரிபார்க்கப்பட்டது என சார்பதிவாளரால் எழுதி கையொப்பமிடப்பட்டு அதனை ஒளி வருடல் செய்திட வேண்டும்.

6. வருவாய் துறையின் 'தமிழ் நிலம்' மென்பொருளும் பதிவுத் துறையின் 'ஸ்டார் 2.0' மென்பொருளும் இணைக்கப்பட்டுள்ளதால் பதிவுக்கு முன் பட்டா சரிபார்க்கப்படுகிறது.
7. வலை நிழலி மற்றும் விரல் ரேகை கருவி மூலம் முறையே புகைப்படம் மற்றும் பெருவிரல் ரேகை அலுவலகத்தில் எடுக்கப்படுகிறது.
8. முந்தைய ஆவணப் பதிவின் போது விரல் ரேகை கருவி மூலம் எடுக்கப்பட்ட விரல் ரேகை ஒப்பீடு செய்யப்படுகிறது.
9. சொத்தின் முந்தைய உரிமையாளரின் கைப்பேசி எண்ணிற்கு பதிவின் போது குறுஞ்செய்தி அனுப்பப்படுகிறது.

**8.2. குறு, சிறு, நடுத்தர தொழில் நிறுவனங்களால் பதிவு செய்யப்படும் உரிமை ஆவணங்கள் ஒப்படைப்பு குறித்த ஆவணங்களுக்கு முத்திரைத் தீர்வை விலக்கு**

சர்வதேச அளவிலான கோவிட்–19 பெருந்தொற்றின் பாதிப்பைக் கருத்தில் கொண்டு,

வங்கி அல்லது நிதி நிறுவனங்களிடமிருந்து ஆத்ம நிர்பார் பாரத் (Aatma Nirbhar Bharat Package/ Emergency Credit Line Guarantee Scheme) திட்டத்தின் கீழ் பெறப்படும் கடன் தொகைக்காக, குறு, சிறு, நடுத்தர தொழில் நிறுவனங்களால் எழுதி கொடுக்கப்படும் உரிமை ஆவணங்கள் ஒப்படைப்பு, அடமானம் முதலான ஆவணங்களின் பதிவிற்கு முத்திரைத் தீர்வையிலிருந்து 100 விழுக்காடு குறுகிய கால விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. இச்சலுகை 31–12–2021 வரை அரசால் நீட்டிக்கப்பட்டுள்ளது.

**9. சங்கங்கள் பதிவு**

தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச்சட்டம், 1975–இன் படி, இலக்கியம், விஞ்ஞானம், சமயம், தொண்டு, விளையாட்டு போன்றவற்றின் மேம்பாட்டிற்காக

உருவாக்கப்படும் அமைப்புகள் சங்கங்களாகப் பதிவு செய்யப்பட வேண்டும். ஒரு சங்கத்தைத் தோற்றுவிப்பதற்கு குறைந்தபட்சம் ஏழு உறுப்பினர்கள் தேவை. சங்கம் தோற்றுவிக்கப்பட்ட பின்னர், சங்க குறிப்பாணை, துணை விதிகள் ஆகியவை சம்மந்தப்பட்ட சங்கங்களின் பதிவாளர் முன்பாக பதிவிற்கு தாக்கல் செய்யப்பட வேண்டும். 'STAR 2.0' இணையதள மென்பொருள் நடைமுறைப்படுத்தப்பட்ட பின்னர் இணைய வழியாக சங்கங்கள் பதிவு செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளது.

9.1. ஒவ்வொரு சங்கமும் அதனை நிர்வகிக்க குறைந்த பட்சம் மூன்று உறுப்பினர்களைக் கொண்ட தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு நிர்வாகக் குழுவினைப் பெற்றிருக்க வேண்டும். சங்கங்களின் பதிவுச்

சட்டம், 1975–இன் படி ஒரு நிதியாண்டிற்கு குறைந்த பட்சம் ஒரு பொதுக் குழு கூட்டமாவது நடத்தப்பட வேண்டும். தணிக்கை செய்யப்பட்ட கணக்கானது, பொதுக் குழுவின் முன் வைக்கப்பட வேண்டும். மேலும், இச்சட்டத்தின்படி தாக்கல் செய்யப்பட வேண்டிய ஆவணங்கள் நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்குள் தாக்கல் செய்யப்பட வேண்டும்.

9.2. ஆவணங்களைக் கோர்வை செய்வதில் ஏற்படும் தாமதத்தினை ஏற்பளிப்பு செய்வதற்கு சட்டத்தில் வழிவகை உள்ளது. 10 ஆண்டுகள் வரை சம்மந்தப்பட்ட மாவட்டப் பதிவாளராலும் 20 ஆண்டுகள் வரை பதிவுத்துறை தலைவராலும் 20 ஆண்டுகளுக்கு மேல் அரசாலும் தாமதங்களை ஏற்க வழிவகை உள்ளது. ஒரு பதிவு பெற்ற சங்கமானது தொடர்ந்து

மூன்றாண்டுகளுக்கு சங்கப் பதிவாளரிடம் ஆண்டறிக்கைகளை கோர்வைக்கு தாக்கல் செய்யாத நிகழ்வில், சங்கங்கள் பதிவுச் சட்டத்தின்படி அச்சங்கத்தின் பெயரினை சங்கங்களின் பதிவேட்டிலிருந்து நீக்கம் செய்திட பதிவாளருக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

9.3. 31-03-2021 அன்றுள்ளபடி மாநிலம் முழுவதிலும் 2,14,109 பதிவு செய்யப்பட்ட சங்கங்கள் உள்ளன. 2020-21 நிதியாண்டில் சங்கங்கள் பதிவுச் சட்டத்தின் கீழ் ரூ.8.13 கோடி அரசுக்கு வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

**10. சீட்டுகள் பதிவு**

சீட்டு நடவடிக்கைகளை முறைப்படுத்திடும் நோக்கத்திற்காக சீட்டு நிதிச் சட்டம், 1982

இயற்றப்பட்டுள்ளது. இச்சட்டத்தின் படி பதிவுத்துறை தலைவர் சீட்டு பதிவாளராக உள்ளார். மாநில அளவில் சீட்டுகள் தொடர்பான நடவடிக்கைகள் கூடுதல் சீட்டுப்பதிவாளரால் கண்காணிக்கப்படுகின்றன. சீட்டு நிதிச் சட்டத்தின் கீழ் துணை பதிவுத்துறை தலைவர்கள் இணை சீட்டுப் பதிவாளர்களாகவும் மாவட்டப்பதிவாளர்கள் துணை சீட்டுப் பதிவாளர்களாகவும் மற்றும் சார்பதிவாளர்கள் (சீட்டு மற்றும் சங்கம்) உதவி சீட்டுப் பதிவாளர்களாகவும் செயல்படுகின்றனர்.

சீட்டு நிறுவனங்களிடமிருந்து பிணைய தொகையினைப் பெற்ற பின்னரே மாவட்டப் பதிவாளரால் புதிய சீட்டு துவங்க முன் ஒப்பளிப்பு அனுமதி ஆணை வழங்கப்படுகிறது. 31-03-2021

அன்றுள்ளபடி மாநிலம் முழுவதிலும் 2,985 பதிவு செய்யப்பட்ட சீட்டு நிறுவனங்கள் உள்ளன. 2020–21 நிதியாண்டில் சீட்டு நிதிச் சட்டம், 1982–இன் கீழ் ரூ.16.79 கோடி வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

## 10.1. சீட்டு நடுவர் மன்றம்

சீட்டுக்கள் நடத்தப்படுவதில் சீட்டு நடத்துபவருக்கும் (Foreman) சந்தாதாரருக்கும் இடையில் ஏற்படும் தகராறுகளைத் தீர்க்க சீட்டு நடுவர் தலைமையிலான சீட்டு நடுவர் மன்றங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. மூன்று நடுவர் மன்றங்கள் இதற்கென பிரத்யேகமாக உள்ளன. அவற்றின் விவரம்:–

(அ) சீட்டு நடுவர், வடசென்னை (ம) தென்சென்னை

(ஆ) சீட்டு நடுவர், மத்தியசென்னை

(இ) சீட்டு நடுவர், கோயம்புத்தூர்

மாநிலத்தின் இதர பகுதிகளில் சம்மந்தப்பட்ட நிர்வாக மாவட்டப் பதிவாளர்களே சீட்டு நடுவர்களாக செயல்படுகின்றனர். சீட்டு நடுவர்கள் சீட்டு வழக்குகளில் விசாரணை நடத்தி உரிய ஆணை பிறப்பிக்கின்றனர். சீட்டு நடுவர்களின் தீர்ப்பாணைகளுக்கு எதிராக அரசிடம் மேல்முறையீடு செய்து கொள்ளலாம்.

**11. கூட்டு பங்காண்மை நிறுவனங்கள் பதிவு**

இந்திய கூட்டு பங்காண்மைச் சட்டம், 1932, ஆனது கூட்டு பங்காண்மை நிறுவனங்களை, இந்நிறுவனங்களின் பதிவாளராக செயல்படும் மாவட்டப்பதிவாளரிடம் பதிவு செய்து கொள்ள வழிவகை செய்கிறது. தற்போது கூட்டு நிறுவனங்களை இணைய வழி மூலம் பதிவு செய்திட

பதிவுத்துறையின் இணைய தளத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. கூட்டு நிறுவனங்கள் இணைய வழியாக பதிவு செய்யப்பட்ட பின்னர், அதற்கான பதிவுச் சான்றினை கூட்டு நிறுவனங்கள் இணைய வழியாகவே பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். தமிழ்நாட்டில் 31-03-2021 அன்றுள்ளவாறு, 5,74,761 பதிவு செய்யப்பட்ட கூட்டு பங்காண்மை நிறுவனங்கள் செயல்பட்டு வருகின்றன. 2020-21 நிதியாண்டில் இந்நிறுவனங்களிடமிருந்து ரூ.9,92,666/- வருவாயாக ஈட்டப்பட்டது.

## 12. முத்திரைத்தாள் விற்பனையாளர்கள்

தமிழ்நாடு முத்திரை விதிகளின் படி மாவட்டப் பதிவாளர்களால் முத்திரைத்தாள் விற்பனையாளர் உரிமம் வழங்கப்பட்டு வருகிறது. உரிமம் பெற்ற முத்திரைத்தாள் விற்பனையாளர் அவரது உரிமத்தில்

குறிப்பிடப்பட்டுள்ள வகை முத்திரைத் தாள்களை மட்டுமே விற்பனை செய்வதற்கு தகுதியுடையவராகிறார். ஒவ்வொரு மாவட்டத்திலும் 10,000 நபர்கள் அடங்கிய மக்கள் தொகைக்கு ஒருவர் என்ற கணக்கில் முத்திரைத்தாள் விற்பனையாளர்கள் நியமனம் செய்யப்படுகின்றனர். தமிழ்நாட்டில் 31.03.2021 அன்றுள்ளபடி மொத்தம் 4,423 முத்திரைத்தாள் விற்பனையாளர்கள் உள்ளனர்.

## 13. ஆவண எழுத்தர்கள்

தமிழ்நாடு ஆவண எழுத்தர் உரிம விதிகள், 1982–இன் படி, மூன்று வகையான உரிமங்கள் வழங்கப்படுகின்றன. அவற்றின் விவரம்:–

| வ. எண் | ஆவண எழுத்தர் உரிம வகை | வழங்கும் அலுவலர் |
|---|---|---|
| (அ) | மாநில உரிமம் ('A' உரிமம்) | பதிவுத் துறை தலைவர்/ துணை பதிவுத் துறை தலைவர் |
| (ஆ) | பதிவு மாவட்ட உரிமம் ('B' உரிமம்) | மாவட்டப் பதிவாளர் (நிர்வாகம்) |
| (இ) | சார்பதிவக அளவிலான உரிமம்('C' உரிமம்) | மாவட்டப் பதிவாளர் (நிர்வாகம்) |

31-03-2021 அன்றுள்ளவாறு, மாநிலத்தில் 2,874 'A' உரிமம் பெற்ற ஆவண எழுத்தர்களும் 2,002 'B' உரிமம் பெற்ற ஆவண எழுத்தர்களும் 312 'C' உரிமம் பெற்ற ஆவண எழுத்தர்களும் ஆக மொத்தம் 5,188 ஆவண எழுத்தர்கள் உள்ளனர்.

13.1. ஆவண எழுத்தர்களின் நலனுக்காக ஏற்படுத்தப்பட்டுள்ள ஆவண எழுத்தர் நல நிதியத்தின் மூலம் நல நிதிய உறுப்பினர்களுக்கு ஓய்வூதியம், இயற்கை எய்தும் உறுப்பினர் குடும்பத்திற்கு நிதியுதவி, திருமண உதவித்தொகை, நல நிதிய உறுப்பினர்களின் குழந்தைகளுக்கு கல்வி உதவித்தொகை போன்ற பல நலத்திட்டங்கள் செயல்படுத்தப்பட உள்ளன.

13.2. பதிவுத் துறையின் இணையதளத்தில் (https://tnreginet.gov.in) வெளியிடப்பட்டுள்ள

ஆவண மாதிரி படிவங்களைப் பயன்படுத்தி பொதுமக்கள் தாங்களாகவே ஆவணங்களை தயாரித்திடவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

## 14. திருமண பதிவு

திருமண பதிவுகள் சார்பதிவாளர் அலுவலகங்களில் கீழ்கண்ட சட்டங்களின் படி மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இந்து திருமணச் சட்டம், 1955

(ஆ) சிறப்பு திருமணச் சட்டம், 1954

(இ) தமிழ்நாடு திருமணங்கள் பதிவுச் சட்டம், 2009.

2020-21-ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட திருமணங்களின் விவரம்:-

| வ. எண் | திருமணச் சட்டம் | பதிவு செய்யப்பட்ட திருமணங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | தமிழ்நாடு திருமணங்கள் பதிவுச் சட்டம், 2009 | 70,065 |
| 2. | இந்து திருமணச் சட்டம், 1955 | 45,212 |
| 3. | சிறப்பு திருமணச் சட்டம், 1954 | 4,537 |

14.1 தமிழ்நாடு திருமணங்கள் பதிவுச் சட்டம், 2009–இன் படி திருமணம் செய்து கொள்பவர்கள் எந்த மதத்தைச் சேர்ந்தவர்களாக இருப்பினும் தமிழ்நாட்டிற்குள் நடைபெற்ற திருமணங்களாக இருப்பின், இத்திருமணங்கள் கட்டாயமாக பதிவு செய்யப்பட வேண்டும்.

14.2. இந்திய கிறித்துவ திருமணச் சட்டம், 1872–இன் கீழ், மத குருமார்கள் அல்லது இந்திய கிறித்துவர்களுக்கு திருமணம் நடத்தி வைக்க உரிமம் பெற்ற நபர்களால் நடத்தி வைக்கப்படும் திருமணங்களின் விவரங்கள் மாவட்டப் பதிவாளர்களால் பெறப்பட்டு பதிவுத்துறை தலைவருக்கு அறிக்கை செய்யப்படுகிறது. கிறித்துவ திருமணச் சான்றுகளின் உண்மை வடிப்புகள்

கோரப்படும்போது, அவை பதிவுத்துறை தலைவர் அலுவலகத்தில் பதிவுத்துறை தலைவரின் நேர்முக உதவியாளர்(பொது)–ஆல் வழங்கப்பட்டு வருகின்றன. மேற்படி சட்டத்தின் கீழ் 2020–21–ஆம் ஆண்டில் 4,138 கிறித்துவ திருமணச் சான்றுகளின் உண்மை வடிப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

## 15. துறையில் தகவல் தொழில் நுட்பத்தின் வளர்ச்சி – கணினிமயமாக்கம் மற்றும் இலக்கமயமாக்கம்

அ) பதிவுத்துறையில் கணினிமயமாக்கல் திட்டம்

06–02–2000 அன்று மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது. முதன்முதலில் 23 அலுவலகங்களில் தொடங்கப்பட்ட கணினிமயமாக்கல் திட்டம் அனைத்து பதிவு அலுவலகங்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டது.

ஆ) கணினிமயமாக்கல் திட்டமானது, 'ஸ்டார்' (Simplified and Transparent Administration of Registration) என்ற மென்பொருள் சேவை மற்றும் 'ரெஜிநெட்' (Registration Information Network) என்ற இணையதள வில்லங்கச்சான்று குறித்த சேவை என இரு நிலைகளில் மேற்கொள்ளப்பட்டது. இவை புராதனப் பதிவுமுறையினை மாற்றியதோடல்லாமல் வெளிப்படையான, எளிமையான, விரைவான, திறமை மிக்க, நிலையான, நம்பகமான மற்றும் பாதுகாப்பான முறையாகவும் அமையப்பெற்றுள்ளது.

இ) 'ஸ்டார்' மென்பொருள் மூலம் ஆவணங்களின் அட்டவணை I, II, III மற்றும் IV தயாரித்தல், ஆவணங்கள் ஒளிவருடல் செய்தல்,

வில்லங்கச்சான்று தயாரித்தல், இந்து திருமணப் பதிவு மேற்கொள்ளுதல் ஆகிய சேவைகள் வழங்கப்பட்டன.

ஈ) கணினிமயமாக்கலில் முன்னோடியாகத் திகழும் இத்துறையில் இயங்கி வந்த மென்பொருள்கள் ஒருங்கிணைக்கப்படாமல் தனித்தனியாக செயல்பட்டு வந்ததால் ஏற்பட்ட சிரமங்களைக் களையவும் பிழைகளற்ற உயர்தர சேவையை மாநிலம் முழுவதும் பொதுமக்களுக்கு சீராக வழங்கும் நோக்குடனும் இணையம் சார்ந்த வலை அடிப்படையிலான ஒருங்கிணைந்த மென்பொருள் ஸ்டார் 2.0 உருவாக்கப்பட்டது.

உ) இந்த மென்பொருள் மூலம், இணைய வழி பணம் செலுத்துகை, வருவாய் பதிவு விவரங்கள் சரிபார்த்தல், கையொப்பமிட்ட சான்றிட்ட நகல்கள்

அளித்தல் போன்ற பல்வகை சேவைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

ஊ) மிகவும் பாதுகாப்பான சூழ்நிலையில் கீழ்கண்ட மூன்று இடங்களில் இத்துறையின் தரவுகள் சேமிக்கப்பட்டு வருகின்றன.

1) எல்காட் மாநில தரவு மையம், பெருங்குடி, சென்னை

2) பதிவுத்துறை தலைவர் அலுவலகம், சென்னை மற்றும்

3) மகாராஷ்ட்ரா மாநிலம், புனே–இல் அமைந்துள்ள தேசிய தகவல் மையத்திலுள்ள இத்துறையின் பேரிடர் மீட்பு தரவு மையம்.

மைய கணினியில் தரவுகள் சேகரிக்கப்படுவதால், முறைகேடுகள் வெகுவாக குறைக்கப்படுகிறது.

எ) அனைத்து பதிவு பொதுமக்களது தேவைக்காக தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் அமைந்த முகப்புகளுடன் (web page) இயங்கும்

பதிவுத்துறையின் இணையதளம் https://tnreginet.gov.in வழியாக 'ஸ்டார்' திட்டம் ஓர் ஒருங்கிணைந்த மின்–ஆளுமைத் திட்டமாக செயல்பட்டு வருகிறது.

ஏ) நிர்வாகத்தில் வெளிப்படைத் தன்மையை உறுதி செய்யவும் பொதுமக்கள் எளிய முறையில் அணுகும் விதமாகவும் புதிய மேம்படுத்தப்பட்ட வலை அடிப்படையிலான மென்பொருள் வடிவமைக்கப் பட்டுள்ளது. மென்பொருள் உருவாக்குதல், வன்பொருள் வழங்கல், நிறுவிடுதல், வலை இணைப்பு, வெளிமுகமை மூலம் சார்பதிவகங்களில் சேவைகளை வழங்குதல், திட்ட செயல்பாட்டிலிருந்து ஐந்து ஆண்டு காலத்திற்கு மென்பொருள் மற்றும் வன்பொருள் பராமரிப்பு ஆகியவை உள்ளடக்கிய இத்திட்டம்

தனியாருடனான ஒப்பந்த முறையில் செயல்படுத்தப்படுகிறது.

**16. வெளிப்படைத் தன்மையினை உறுதிப்படுத்தும் 'ஸ்டார் 2.0' மென்பொருள் மற்றும் ரெஜிநெட் (REGINET) இணைய தள சேவையின் சிறப்பம்சங்கள்**

அ) பொதுமக்கள், ஆவண எழுத்தர்கள் மற்றும் வழக்கறிஞர்களுக்கென தனியாக உள்நுழைவு (login) வசதிகள் உருவாக்கப்பட்டுள்ளன.

ஆ) இணையதளம் மூலம் சுயமாக ஆவணத்தை உருவாக்கிக் கொள்வதற்காக ஏற்படுத்தப்பட்டுள்ள வசதியின் கீழ் விற்பவர், வாங்குபவர் மற்றும் சொத்து தொடர்பான விவரங்களை உள்ளீடு செய்து பொதுமக்கள் தங்களது ஆவணங்களைத் தாங்களே தயார் செய்து கொள்ள இயலும்.

இ) உரிய சார்பதிவாளர் அலுவலகத்தைத் தேர்வு செய்து, ஆவணப்பதிவு மற்றும் திருமணப்பதிவிற்கு இணையதளம் மூலம் முன்பதிவு செய்து கொள்ளும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த வசதியின் மூலம் பொதுமக்கள் தங்கள் பதிவிற்கான விருப்பமான தேதி மற்றும் நேரத்தினை தேர்வு செய்து ஒப்புகைச் சீட்டு பெற்றுக் கொள்ள இயலும்.

ஈ) பதிவிற்கு ஆவணம் தாக்கல் செய்யப்பட்டது முதல் திருப்பி அளிக்கப்படும் வரை

1) ஆவணம்/திருமண பதிவிற்கான முன் பதிவு விவரம்

2) ஆவணம் நிலுவையில் வைக்கப்பட்டால் அதற்கான காரணம்

3) வில்லங்கச்சான்றின் விண்ணப்ப நிலவரம்

4) மதிப்பு குறைவான ஆவணங்கள் முத்திரைத் தாள் மாவட்ட வருவாய் அலுவலர்/ தனித் துணைஆட்சியருக்கு அனுப்பப்பட்ட விவரம்

5) கள ஆய்விற்குப் பின் செலுத்தப்பட வேண்டிய வித்தியாச முத்திரைத்தீர்வை மற்றும் பதிவுக்கட்டண விவரம்

6) ஆவணம் திருப்பித் தர தயாராக உள்ள விவரம்

7) பட்டா மாறுதல் விண்ணப்ப விவரம்

போன்ற 33 வகையிலான தகவல்கள் பதிவு செய்தவருக்கு குறுஞ்செய்தியாக அனுப்பப்படுகிறது.

உ) வட்டாட்சியர் அலுவலகங்களுக்கு இணைய வழி பட்டா மாற்ற விவரங்கள் அனுப்பிடுதல் மற்றும் இவ்விவரத்தினை வட்டாட்சியர் அலுவலகத்திலிருந்து பெறப்பட்ட ஒப்புகையுடன் ஆவணதாரருக்கு குறுஞ்செய்தி மூலம் அனுப்பிடும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

ஊ) பதிவுத்துறைக்கு செலுத்த வேண்டிய கட்டணங்களை அனைத்து வங்கிகள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட பணப்பரிவர்த்தனை முறைகள்

வழியாக பணம் செலுத்தும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

எ) வில்லங்கச்சான்றுகளை 1975–ஆம் ஆண்டு முதல் இணைய வழியாக கட்டணமின்றி பார்வையிடவும் தரவிறக்கம் செய்து கொள்ளவும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

ஏ) சங்கங்கள் பதிவு செய்ய மாவட்ட பதிவாளர் அலுவலகம் வராமல் சங்கத்தின் துணை விதிகள், உறுப்பினர் படிவம் போன்றவற்றை இணைய வழி அனுப்பும் வசதி, உரிய கட்டணத்தை இணைய வழி செலுத்திடும் வசதி ஆகியவை ஏற்படுத்தப்பட்டுள்ளன. இந்த விண்ணப்பம் மாவட்டப் பதிவாளரால் பரிசீலிக்கப்பட்டு, பதிவு செய்யப்பட்டதற்கான அவரது மின் கையொப்பத்துடன் கூடிய சான்று பயனர்களின்

உள்நுழைவிற்கு இணைய வழி அனுப்பி வைக்கப்படும்.

ஐ) கூட்டாண்மை நிறுவனங்களைப் பதிவு செய்ய கூட்டாண்மை நிறுவனத்தின் விண்ணப்பத்தை இணைய வழியிலேயே சமர்ப்பித்து, அதற்கான பதிவுக்கட்டணத்தையும் இணைய வழி செலுத்திடும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த விண்ணப்பம் மாவட்டப் பதிவாளரால் பரிசீலிக்கப்பட்டு, பதிவிற்குப் பின்னர், அவரின் மின் கையொப்பத்துடன் கூடிய சான்று பயனாளியின் உள்நுழைவிற்கு இணைய வழி அனுப்பி வைக்கப்படுகிறது.

ஒ) பதிவு செய்த சீட்டு நிறுவனங்களின் ஐந்தொகைக் கணக்கு மற்றும் சீட்டு நிகழ்ச்சி குறிப்பு இணைய வழி அனுப்பிடும் வசதி செய்யப்பட்டுள்ளது.

ஓ) பொதுமக்கள் தங்கள் சந்தேகங்களையும் குறைகளையும் தெரிவித்து, நிவர்த்தி செய்து கொள்வதற்கு ஏதுவாக கட்டணமில்லா தொலைபேசி எண் 1800 102 5174 மூலம் வசதி செய்யப்பட்டுள்ளது.

**17. இணைய நெறிமுறை புகைப்பட கருவிகள் (IP camera)**

பொதுமக்களுக்கு தரமான சேவை வழங்குவதில் அடுத்த கட்ட நடவடிக்கையாகவும் சார்பதிவகங்களில் இடைத் தரகர்களின் தலையீட்டினைத் தவிர்ப்பதற்காகவும் பதிவு நடவடிக்கைகளின்போது நேர்மையற்ற செயல்பாடுகளைக் களைவதற்காகவும் தலைமை அலுவலகம் மற்றும் மண்டல அலுவலகங்களிலிருந்து தொலை கண்காணிப்பு செய்வதற்காக ஒவ்வொரு சார்பதிவாளர் அலுவலகத்திலும் 3 இணையவழி புகைப்பட கருவிகள்

(IP Camera) நிறுவப்பட்டுள்ளன. இதன் மூலம் சார்பதிவாளர் அலுவலகத்தின் செயல்பாடுகளை பதிவுத்துறை தலைவர் அலுவலகம் மற்றும் துணை பதிவுத்துறை தலைவர் அலுவலகங்களிலிருந்து கண்காணிப்பு செய்திடும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இணைய நெறிமுறை புகைப்பட கருவிகள் (IP Camera) மூலம் பதிவாகும் நிகழ்வுகள் ஒவ்வொரு ஆவண/திருமண பதிவும் ஆவணதாரர்களுக்கு/ திருமணம் பதிவு செய்பவர்களுக்கு DVDல் பதிவு செய்து தரப்படுகிறது. ஒவ்வொரு DVDக்கும் கட்டணம் ரூ.100/– வசூலிக்கப்படுகிறது.

**18. இணைய வழியாக வங்கிகளில் பணம் செலுத்திடும் முறை**

துறை கட்டணங்களை பாதுகாப்பான மற்றும் எளிதான முறையில் செலுத்திடும் நோக்கில் கீழ்கண்ட

அங்கீகரிக்கப்பட்ட வங்கிகள் மூலம் இணையவழியாக அல்லது நேரடியாக வங்கிகளில் பணம் செலுத்திடும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

(i) பாரத ஸ்டேட் வங்கி
(ii) இந்தியன் ஓவர்சீஸ் வங்கி
(iii) இந்தியன் வங்கி
(iv) ஐடிபிஐ வங்கி
(v) சென்ட்ரல் பேங்க் ஆஃப் இந்தியா
(vi) பஞ்சாப் நேஷனல் வங்கி
(vii) பேங்க் ஆஃப் பரோடா
(viii) யூனியன் பேங்க் ஆஃப் இந்தியா

இது தவிர, பாரத ஸ்டேட் வங்கியுடன் துறையின் மென்பொருள் இணைக்கப்பட்டு அவ்வங்கி மற்ற வங்கிகளின் ஒருங்கிணைப்பாளராக செயல்படுகிறது. இதன் மூலம் அனைத்து வங்கிகள் (58 வங்கிகள்) மற்றும் அங்கீகரிக்கப்பட்ட பணப்பரிவர்த்தனை முறைகளான இணைய வங்கி சேவை (Net Banking),

பற்று அட்டை (Debit Card), கடன் அட்டை (Credit Card) மற்றும் ஒருங்கிணைந்த கட்டண முகப்பு (UPI Payment) நிகழ் நேரத்தில் மொத்த தொகை தீர்வு செய்தல் (RTGS), தேசிய மின்னணு நிதி பரிவர்த்தனை (NEFT) ஆகியவற்றின் மூலம் துறை கட்டணங்களை செலுத்தும் முறை நடைமுறையில் உள்ளது. இது தவிர, ரூ.1000/–க்கு குறைவான கட்டணங்களை வசூலிக்க அனைத்து 575 சார்பதிவாளர் அலுவலகங்களுக்கும் PoS கருவிகள் பாரத ஸ்டேட் வங்கி மூலம் வழங்கப்பட்டுள்ளன.

**19. வில்லங்கச் சான்று எவ்வித கட்டணமுமின்றி இணையதளத்தில் பார்வையிடும் மற்றும் பதிவிறக்கம் செய்து கொள்ளும் வசதி**

சொத்து வாங்குவதற்கான முதல் நடவடிக்கையான வில்லங்கச் சான்றினைப் பெறுவதற்கு பொதுமக்கள் சார்பதிவகங்களைச்

சார்ந்துள்ளனர். அவர்கள் சார்பதிவகங்களை நேரடியாக நாடுவதைக் குறைத்திடும் விதமாகவும் சொத்து பரிமாற்றங்களில் வெளிப் படைத்தன்மையைக் கொணரும் பொருட்டும் சொத்து உரிமையாளர்கள் இம்மாநிலத்திலுள்ள தங்களது சொத்து தொடர்பான பதிவு பரிமாற்ற விவரங்களை துறையின் இணையதளம் வழியாக எவ்வித கட்டணமுமின்றி எங்கிருந்தும் / எப்போது வேண்டுமானாலும் பார்வையிடுவதற்காக இத்துறையின் இணையதளத்தில் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. தங்கள் சொத்து தொடர்பான வில்லங்கச் சான்றுகளை பொதுமக்கள் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். இவ்வசதியினைப் பயன்படுத்தி

தினந்தோறும் சுமார் 70,000 சான்றுகள் பதிவிறக்கம் செய்யப்படுகின்றன.

**20. வில்லங்கச் சான்றுகள் மற்றும் ஆவணங்களின் சான்றிட்ட நகல்களை இணையதளம் வழியாக பெறும் வசதி**

கணினிமயமாக்கப்பட்ட காலகட்டத்திற்கு உட்பட்ட நேர்வுகளில் மின் கையொப்பமிட்ட மற்றும் விரைவு குறியீடிட்ட வில்லங்கச்சான்றுகள் மற்றும் சான்றிட்ட நகல்களைப் பெறுவதற்காக, இணைய வழி கட்டணம் செலுத்தி விண்ணப்பம் செய்பவர்கள் தங்களது உள்நுழைவு வழியாகவே இச்சான்றுகளை பெற்றுக் கொள்ளலாம். இதன் மூலம் பொதுமக்கள் தங்களது இருப்பிடத்திலிருந்தே சான்றிட்ட வில்லங்கச்சான்றுகள் மற்றும் சான்றிட்ட நகல்களை பெற்றுக் கொள்ள முடியும்.

## 21. மின்னணு பதிப்புமுறை (e-Stamping)

பதிவுத்துறைக்கு செலுத்த வேண்டிய முத்திரைத்தீர்வையை செலுத்த மாற்று வழியான மின்னணு பதிப்பு முறையை தமிழ்நாடு அரசின் சார்பாக மேற்கொள்ள திருவாளர்கள் ஸ்டாக் ஹோல்டிங் கார்ப்பரேஷன் ஆஃப் இந்தியா நிறுவனத்திற்கு (SHCIL– Stock Holding Corporation of India Limited) அனுமதியளிக்கப்பட்டுள்ளது. முதல் கட்டமாக, சென்னையில் உள்ள ஒன்பது அலுவலகங்களில் இந்த மின்னணு பதிப்பு முறையானது 27–05–2010 அன்று துவக்கி வைக்கப்பட்டது.

மின் முத்திரைத்தாள் என்பது மின்னணு பதிப்பு முறை மூலம் தோற்றுவிக்கப்பட்ட முத்திரைத் தாளாகும். எல்லா விதமான ஆவணங்களுக்கும்

சாதாரண முத்திரைத்தாளினைப் போலவே மின்முத்திரைத்தாளைப் பயன்படுத்தலாம். ஒரே ஒரு முத்திரைச் சான்றை எந்த முத்திரைத்தீர்வை மதிப்பிற்கும் மின்னணு பதிப்பு முறையாக பயன்படுத்தலாம். இதில் கணினி மூலம் வழங்கப்படும் ஒரு பிரத்தியேக எண் (unique number) இருக்கும்.

சென்னை மண்டலத்தில் உள்ள அனைத்து 63 சார்பதிவகங்களிலும் மற்ற மாநகராட்சி பகுதிகளில் உள்ள 56 சார்பதிவகங்களிலும் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. மைலாப்பூர், மத்திய சென்னை இணை–1, வடசென்னை இணை–1, தென்சென்னை இணை–1 ஆகிய சார்பதிவாளர் அலுவலகங்களில் திருவாளர்கள் SHCIL நிறுவனத்தால் அமைக்கப்பட்டுள்ள மையங்களிலும்

அந்நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட வசூலிப்பு மையங்களாக செயல்படும் வங்கிகளிலும் மின்னணு முத்திரைத்தாள்கள் கிடைக்கும். மேலும், சென்னை உயர்நீதிமன்ற வளாகத்திலும் அதன் மதுரை கிளையிலும் நீதிசார்ந்த மின் முத்திரைத்தாள்கள் திருவாளர்கள் SHCIL நிறுவனம் மூலம் விற்பனை செய்யப்படுகிறது.

**22. வலை நிழலி (Web-Cam) மற்றும் மின்னணு ரேகை பதிவு (Bio-metric device) செயல்படுத்தல்**

பதிவு நடைமுறையில் மனித தவறுகள், ஆள்மாறாட்டம், போலி ஆவணப் பதிவு நடவடிக்கைகள் ஆகியவற்றினைத் தடுத்திட வலை நிழலி (Web-Cam) மூலம் புகைப்படம் மற்றும் மின்னணு ரேகைக் கருவி மூலம் ரேகை எடுக்கும் திட்டம்

29-07-2010 முதல் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம் அனைத்து சார்பதிவாளர் அலுவலகங்களிலும் செயல்படுத்தப்படுகிறது. சொத்தினை வாங்கும்போது வாங்குபவரின் விரல் ரேகை, விரல் ரேகைக் கருவி மூலம் எடுக்கப்பட்டிருந்தால் அவர் சொத்தினை விற்கும்போது ஏற்கனவே அவரிடம் எடுக்கப்பட்ட விரல் ரேகையுடன் தற்போது எடுக்கப்படும் விரல் ரேகை ஒப்பிட்டு பார்க்கப்பட்ட பின்னரே ஆவணம் பதிவு செய்யப்படுகிறது.

## 23. மின் கையொப்பம் (e-Sign)

துறை அலுவலர்களுக்கு ஆதார் அடிப்படையிலான மின் கையொப்பமிடும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. ஆதார் தரவுடன்

இணைக்கப்பட்ட இம்மின்கையொப்பம் வில்லங்கச் சான்று, சான்றிட்ட நகல், சங்கங்களின் பதிவுச்சான்று, கூட்டாண்மை நிறுவனங்களின் பதிவுச்சான்று ஆகியவற்றில் பதிக்கப்பட்டு இச்சான்றுகள் இணையதளம் மூலம் பொதுமக்களுக்கு வழங்கப்படுகின்றன. இவ்வசதியை தமிழ்நாடு மின்–ஆளுமை முகமை (TNeGA)-யிடமிருந்து பெற்றிட வருடாந்திர தொடர் செலவினத் தொகையாக ரூ.28,70,000/– ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

**24. சார்பதிவாளர் அலுவலகங்களில் உள்ள ஆவணத் தொகுதிகளை மின்னணுமயமாக்கல்**

சார்பதிவாளர் அலுவலகங்களில் உள்ள பழைய ஆவணத் தொகுதிகள், அட்டவணைத் தொகுதிகள் போன்றவை இயற்கை சீற்றங்களால் பாதிக்கப்படாமல்

இருக்கவும் சிதிலமடைவதால் ஏற்படும் பதிவு விவரங்கள் இழப்பைத் தவிர்க்கவும் இவற்றை மின்னணுமயமாக்கி நிரந்தரமாக பராமரிக்க அரசால் முடிவு செய்யப்பட்டு 1865 முதல் 05-07-2009 வரையிலான காலத்திற்கான ஆவணங்கள் ஒளிவருடல் செய்யப்பட்டு வருகின்றன. சார்பதிவகங்களில் பாதுகாத்து வைக்கப்பட்டுள்ள பழைய ஆவணங்களை ஒளிவருடல் செய்யும் பணி ஒப்பந்தப் புள்ளி மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட இரண்டு தனியார் நிறுவனங்களால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தினால் திருத்த இயலாத வகையில் ஆவணப் பாதுகாப்பு உறுதி செய்யப்படுவதோடு இணையத்தின் வழியாக பொதுமக்களுக்கு

சான்றிட்ட நகலை எளிதாக வழங்க இயலும். மேலும் பட்டா மாறுதலின்போது, வருவாய் துறையினரால் பட்டா மாற்றுவதற்கு தேவையான முன் ஆவணங்களை இணைய வழியாகவே பரிசீலிக்க இயலும்.

**25. ஆவணத்தை எழுதி கொடுப்பவர் மற்றும் எழுதி வாங்குபவரது விரல் ரேகை/ கருவிழிப்படல தரவுகளை ஆதார் தரவுடன் சரிபார்க்கும் முன்னோடி திட்டம்**

ஆவணப் பதிவின்போது ஆவணத்தை எழுதி கொடுப்பவர்/எழுதி வாங்குபவரது விரல் ரேகை எடுக்கப்படுகிறது. இந்த விரல் ரேகையை நிகழ் நேரத்தில் ஆதார் தரவுடன் ஒப்பிட்டு சரிபார்ப்பதால் ஆள்மாறாட்டத்தைத் தவிர்க்கலாம். விரல் ரேகை பொருந்தாத இனங்களில் சம்மந்தப்பட்டவர்களின்

கருவிழியைப் பதிவு செய்து அதனை ஆதார் தரவின் கருவிழி பதிவு விவரங்களுடன் சரிபார்க்கலாம்.

இத்திட்டமானது கீழ்கண்ட இடங்களில் அவ்விடங்களுக்கு எதிரே குறிப்பிடப்பட்டுள்ள நாள் முதல், முன்னோடி திட்டமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

| வ. எண். | மண்டலம் | மாவட்டம் | சார்பதிவகம் | செயல் படுத்தப்பட்ட தேதி |
|---|---|---|---|---|
| 1 | மதுரை | விருதுநகர் | இராஜபாளையம் | 07-06-2021 |
| 2 | சென்னை | மத்திய சென்னை | இணை சார்பதிவகம்-எண் 1 | 07-06-2021 |
| 3 | கோயம்புத்தூர் | கோயம்புத்தூர் | பீளமேடு | 02-08-2021 |
| 4 | சேலம் | சேலம் கிழக்கு | தாதகாபட்டி | 02-08-2021 |
| 5 | தஞ்சாவூர் | தஞ்சாவூர் | மகர்நோம்புச்சாவடி | 02-08-2021 |
| 6 | திருநெல்வேலி | திருநெல்வேலி | இணை சார்பதிவகம்-எண் 1 | 02-08-2021 |
| 7 | வேலூர் | வேலூர் | பள்ளிகொண்டா | 02-08-2021 |
| 8 | கடலூர் | விருத்தாசலம் | வேப்பூர் | 02-08-2021 |
| 9 | திருச்சி | திருச்சி | முசிறி | 02-08-2021 |

இம்முன்னோடி திட்டத்தின் அனுபவ அடிப்படையில் இத்திட்டம் மாநிலம் முழுவதும் விரிவாக்கப்படும்.

**26. தானியங்கி பட்டா மாற்றம் (Automatic Patta Transfer)**

பதிவுத்துறை மென்பொருள் 'ஸ்டார் 2.0' மற்றும் வருவாய் துறை மென்பொருள் 'தமிழ்நிலம்' ஆகியவை ஒன்றிணைக்கப்பட்டுள்ளதால், ஆவணப்பதிவு முடிந்தவுடன் பட்டா மாற்றம் செய்வதற்கான விண்ணப்பங்களில் உட்பிரிவு தேவையான விண்ணப்பங்கள், உட்பிரிவு தேவைப்படாத விண்ணப்பங்கள் என இரண்டாகப் பிரிக்கப்பட்டு அவை வருவாய் துறைக்கு இணையவழி அனுப்பப்படுகின்றன. இவற்றில் உட்பிரிவு தேவைப்படாத இனங்களில் கீழ்கண்ட நிபந்தனைகள்

பொருந்தி வரும் நிலையில் 'தமிழ்நிலம்' மென்பொருளில் தானாகவே பட்டா மாற்றம் செய்யப்படுகிறது.

1. விற்பவரின் பெயர் பட்டாவில் இருத்தல்
2. சொத்தானது வில்லங்கங்கள் ஏதுமின்றி இருத்தல்
3. சொத்து அமைந்துள்ள சர்வே எண் மற்றும் உட்பிரிவு சரியாக இருத்தல்
4. சொத்து வாங்குபவருக்கு அதே கிராமத்தில் வேறு சொத்து இருப்பின் அதன் பட்டா விவரம் கொடுத்தல்

மேற்கண்ட திட்டமானது கிராமங்களைப் பொருத்து தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. நகரங்களைப் பொருத்து 'ஸ்டார் 2.0' மற்றும் 'தமிழ் நிலம்' மென் பொருட்களை இணைக்கும் பணி முடிவுற்று திருவல்லிக்கேணி, மாம்பலம் வட்டங்களில்

மட்டும் சோதனை ஓட்ட முறையில் துவக்கப்பட்டுள்ளது. முன்னோடி திட்டத்தின் அனுபவ அடிப்படையில் இத்திட்டம் மாநிலம் முழுவதும் உள்ள நகர்ப்புற பகுதிகளுக்கு விரிவாக்கப்படும்.

**27. எளிதாக தொழில் நடத்த மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள்**

தொழில் தொடங்க ஏதுவான சூழலை ஏற்படுத்துதல், புதிய முதலீடுகளை ஈர்த்தல், வேலைவாய்ப்புகளைப் பெருக்குதல் ஆகியவற்றின் மூலமாக மாநிலத்தின் பொருளாதாரத்தை மேம்படுத்த அரசால் கடைபிடிக்கப்படும் கொள்கைக்கு இணங்க பதிவுத்துறையில் பல சீர்திருத்தங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

அ) 'எளிதாக தொழில் செய்யலாம்' திட்டத்தின் கீழ் வழிகாட்டி குழுவால் (‘Guidance Bureau’) உருவாக்கப்பட்டுள்ள ஒற்றைச்

சாளர இணையதளத்துடன் பதிவுத் துறையின் கீழ்கண்ட சேவைகளும் இணைக்கப்பட்டுள்ளன.

1. வில்லங்கச்சான்று
2. சான்றிட்ட ஆவண நகல்
3. சங்கங்களின் பதிவு
4. கூட்டு நிறுவனங்களின் பதிவு

ஆ) தேசிய தகவல் மையத்தால் தொடங்கப்பட்டுள்ள நில விவர இணையதளத்தில் (Land Information Portal) சொத்துகளின் வில்லங்க விவரங்களைப் பார்வையிடும் வசதி இணைக்கப்பட்டுள்ளது.

இ) இணையதள வழியாக கூட்டாண்மை நிறுவனங்களைப் பதிவு செய்து கொள்ளும் வசதியானது தொழில் முதலீட்டுதாரர்களால் நன்கு பயன்படுத்தப்பட்டு வருகிறது.

ஈ) தொழில் முதலீட்டுதாரர்களின் நலனைக் கருத்தில் கொண்டு, வங்கிகளினுடனான உரிமை ஆவணங்கள் ஒப்படைப்பு ஆவணம் மற்றும் வாடகை ஒப்பந்த ஆவணங்களை இணைய வழியாகவே பதிவு செய்து கொள்ளும் வசதியை ஏற்படுத்தித்தர முடிவெடுக்கப்பட்டு அதற்கு தேவையான சட்ட திருத்தங்களை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**27.1. மாநில சட்ட ஆணையத்தின் பரிந்துரையின்படி வழக்கற்றுப்போன சட்டங்களை இரத்து செய்தல் மற்றும் சட்ட திருத்தங்கள் மேற்கொள்ளுதல்**

தொழில் செய்வதை ஊக்கப்படுத்தவும் அதற்கான நெறிமுறைகளைக் கடைபிடிப்பதில் தொழில் செய்வோர்க்கும் பொதுமக்களுக்கும் எளிய வழிமுறைகளை ஏற்படுத்துவதற்கும் ஏதுவாக பழைய மற்றும் வழக்கற்றுப் போன சட்டங்கள் இரத்து,

முதன்மைச் சட்டத்தில் திருத்தம் ஆகிய பரிந்துரைகளை மாநில சட்ட ஆணையம் முன்வைத்துள்ளது. இதனடிப்படையில் சங்கங்கள் பதிவுச் சட்டம், 1954, இந்திய கூட்டாண்மைச் சட்டம், 1932, பதிவுச் சட்டம், 1908 மற்றும் இந்திய முத்திரைச் சட்டம், 1899 தொடர்பான 31 திருத்த சட்டங்களை இரத்து செய்வதற்கு இத்துறையால் அரசுக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

## 28. தகவல் அறியும் உரிமைச் சட்டம், 2005–இன் கீழ் பெறப்பட்ட மனுக்கள்

2020–ஆம் வருடத்தில் தகவல் அறியும் உரிமைச் சட்டம், 2005–இன் கீழ் இத்துறையால் மொத்தம் 21,774 மனுக்கள் பெறப்பட்டன. அம்மனுக்களின் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு, இச்சட்டத்தால் குறிப்பிடப்பட்டுள்ள கால

வரையறைக்குள் உரிய பதில்கள் அனுப்பப்பட்டன. 2020–ஆம் வருடத்தில் இச்சட்டத்தின் கீழ் பெறப்பட்ட கட்டணத் தொகை ரூ.2,68,442/– ஆகும்.

## 29. பொது நலன் கருதி புதிய அரசு மேற்கொண்டுள்ள சீரிய முயற்சிகள்

### 29.1 கட்டுப்பாட்டு அறை

பதிவுத்துறையில் எளிமையான மற்றும் வெளிப்படையான நிர்வாகத்தை வழங்கும் விதமாக, தமிழக வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சரால் 16–06–2021 அன்று கட்டுப்பாட்டு அறை ஒன்று பதிவுத்துறை தலைவர் அலுவலகத்தில் துவக்கப்பட்டுள்ளது. பொதுமக்கள் தொலைபேசி, குறுந்தகவல்கள் மற்றும் மின்னஞ்சல் மூலம் பதிவு தொடர்பான புகார்களைத் தெரிவிக்கலாம்.

பொதுமக்களின் புகார்களுக்கு உடனடி தீர்வுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

கட்டுப்பாட்டு அறை தொலைபேசி எண்கள்

9498452110

9498452120

9498452130

**கட்டுப்பாட்டு அறை துவக்கப்பட்ட நாளான 16.06.2021 முதல் 25.08.2021 வரையிலான காலகட்டத்தில் மொத்தம் 6,177 புகார்கள் பெறப்பட்டு தீர்வு செய்யப்பட்டுள்ளன.**

## 29.2 பதிவு அலுவலகங்களில் உயர்மேடைகள் மற்றும் தடுப்புகள் அகற்றம்

பதிவு அலுவலகங்களில் வெளிப்படைத் தன்மையை உறுதிபடுத்தவும் எளிதில் அணுக ஏதுவாகவும் அவ்வலுவலகங்களில் பன்னெடுங்காலம் பயன்பாட்டில் இருந்த பதிவு அலுவலர்கள் அமரும்

உயர்மேடைகள் மற்றும் அதனைச் சுற்றி ஏற்படுத்தப்பட்டிருந்த தடுப்புகள் நீக்கப்பட்டுள்ளன. இது ஆவணதாரர்களுக்கு எளிதான அணுகுமுறையோடு சமூக நீதியையும் பெற்றுத் தருகிறது. மேலும் இம்மாற்றம் பல்வேறு தரப்பினரின் பாராட்டுதல்களையும் பெற்று வருகிறது.

### 29.3. ஆவண எழுத்தர்கள்/ஆவணம் எழுதும் வழக்கறிஞர்களின் புகைப்படத்தினை ஆவணத்தில் ஒட்டுதல்

மோசடி மற்றும் போலி ஆவணங்கள் தயாரித்தலைத் தடுக்கும் பொருட்டு ஆவணத்தைத் தயார் செய்யும் ஆவண எழுத்தர் / வழக்கறிஞரின் ஒளி வருடல் செய்யப்பட்ட புகைப்படம் மற்றும் உரிம எண்/ பார் கவுன்சில் பதிவு எண்ணுடன் அன்னாரின் கையொப்பத்தை ஆவணத்தில் இடம் பெறச் செய்ய


உத்திரவிடப்பட்டு இந்நடைமுறை 9.8.2021 முதல் கடைபிடிக்கப்பட்டு வருகிறது.

30. நிறைவுரை

பதிவு நடைமுறைகளில் வெளிப்படைத் தன்மையை நடைமுறைப்படுத்த பதிவுத்துறை உறுதி பூண்டுள்ளது. மேலும், ஆவணப் பதிவுகளில் நடைபெறும் முறைகேடுகளைத் தடுக்க பல்வேறு கடுமையான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. பதிவு விதிமீறல்கள் தொடர்பான எத்தகைய சவால்களையும் சட்டப்படியான மற்றும் நவீன உத்திகளைப் பயன்படுத்தி எதிர்கொள்ள இத்துறை தயார் நிலையில் உள்ளது.

**பி. மூர்த்தி**
**வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர்**

# பதிவுத்துறை




பல்வேறு சட்டங்களின் கீழ் 2020-2021 ஆம் ஆண்டில் வசூலிக்கப்பட்ட வருவாய் விவரம்



பதிவுத்துறையில் கணினிமயமாக்கல் திட்டம் 06.02.2000 அன்று மாண்புமிகு முன்னாள் தமிழ்நாடு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது.



முத்திரைத் தீர்வை செலுத்துதலின் மாற்று முறையாக மின்னணு முத்திரைப் பதிப்பு முறை (e–Stamping) 27.05.2010 அன்று, அப்போதைய மாண்புமிகு தமிழக துணை முதல் அமைச்சர் அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்டது.








சென்னை மண்டலத்தைச் சேர்ந்த பதிவு அலுவலர்களுக்கான ஆய்வுக் கூட்டம் சென்னையில் 25.06.2021 அன்று வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சரின் தலைமையில் நடைபெற்றது.




பதிவு தொடர்பான புகார்களைத் தெரிவிக்க சென்னையில் அமைந்துள்ள பதிவுத்துறை தலைவர் அலுவலகத்தில் கட்டுப்பாட்டு அறை வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சரால் 16.06.2021 அன்று தொடங்கி வைக்கப்பட்டது.



பதிவுத்துறையின் 575 சார்பதிவாளர் அலுவலகங்களையும் நேரடியாக இணைய நெறிமுறை புகைப்படக் கருவி மூலம் பதிவுத்துறை தலைவர் அலுவலகத்தில் இருந்தே அகன்ற திரை மூலம் கண்காணிக்கும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. அனைத்து மண்டல தலைமை அலுவலகங்களிலும் இதே வசதி உள்ளது.



'ஸ்டார்' (STAR – Simplifed Transparent Administration of Registration) திட்டத்தின் கீழ், மேம்படுத்தப்பட்ட t n r e g i n e t இணையதளம் வழியாக பதிவுத்துறையின்அனைத்து சேவைகளும் இணைய வழியே தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் வழங்கப்படுகின்றன.